# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW15

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவிகுமார் | Caste | : |
| S/o.W/o.D/o. | : ராமசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 27.02.2025.

A1,A2 present. A3 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மகுடஞ்சாவடியில் குடியிருந்து கொண்டு ஓட்டல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் உள்ளூர்க்காரர்கள் என்பதால் அவர்களை தெரியும். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. சின்னுசாமி கொலை வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சின்னசாமி இறந்துவிட்டார். அவர் தூக்கு மாட்டிக்கொண்டதாக சொன்னார்கள். சின்னசாமியை எனக்குத் தெரியும். அவர் எனது கடைக்கு பேப்பர்

போட்ட வகையில் அவரை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆனால் நான் சின்னுசாமியிடம் டிவியை ரிப்பேருக்கு கொடுத்ததாகவும் அதை வாங்க வந்தேன் என்று மட்டும் கூறினேன்.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தபோது அந்த விசாரணையில் அம்மன் ஓட்டல் என்ற பெயரில் கடை நடத்தி வருவதாகவும் கடையில் இருந்த டிவி சரியாக ஓடவில்லை என்று 18.5.2018ம் தேதி மாலை நானும், ஜெயராமன் என்பவரும் இறந்துபோன சின்னுசாமியின் வீட்டிற்கு டிவி ரிப்பேர் செய்ய போனதாகவும், அப்போது சின்னசாமியின் மூத்த மகன் சந்திரசேகரும் அவருடன் 2 பேரும் வீட்டில் இருந்து வெளியே வந்ததாகவும், அப்போது சந்திரசேகர் என்னிடம் என்ன என்று கேட்டார் என்றும் டிவி ரிப்பேர் பார்க்க வந்தோம் என்று சொன்னேன் என்றும் அதற்கு அவர் அப்பா வெளியே போய்விட்டார் டிவியை வைத்துவிட்டு போங்க சாயங்காலம் வந்து அப்பாவை பாருங்க என்று சொன்னார் என்றும் அதன்பிறகு நான் திரும்பி வரும்போது 3 பேரும் சின்னுசாமியின் வீட்டிற்குள் போனார்கள் என்றும், மறுநாள் 19.5.2018ம் தேதி காலையில் கடையில் இருந்தபோது கடைக்கு வந்தவர்கள் சின்னுசாமியை அவரது மகன் சந்திரசேகர் 2 பேரை கூட்டி வந்து

சொத்திற்காக கழுத்தை இறுக்கி கொலை செய்துவிட்டதாக சொன்னேன் என்றும், நான் போன சமயத்தில் சந்திரசேகர் 2 பேருடன் சின்னுசாமியை கொலை செய்யதான் வீட்டிற்குள் போனார் என்று தெரிகிறது என்றும் அவர்களை எனக்கு அடையாளம் தெரியும் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு எதிரிகள் உள்ளூர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.